8 செப்டம்பர் 2026 • செவ்வாய்

தமிழ் முரசு
TAMIL MURASU
சமூகத்தின் குரல்

MCI (P) 008/04/2026
தோற்றம்: 1935 நிறுவனர்: தமிழவேள் கோ சாரங்கபாணி
sph media



# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் குடும்ப தின நிகழ்ச்சி

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் சிங்கப்பூர்க் கிளை, ஞாயிற்றுக் கிழமை (செப்டம்பர் 6) சிங்கப்பூரின் ஈஸ்ட் கோஸ்ட் பூங்காவில் உறுப்பினர்கள் ஒன்றுகூடும் குடும்ப தின நிகழ்ச்சியை நடத்தியது.

மாணவர்களுக்கான போட்டிகள், பெற்றோர்க்கான விளையாட்டுகள், டாக்டர் ஹபீப் சகிலா பானு வழங்கிய மருத்துவச் சொற்பொழிவு, அதிர்ஷ்டக் குலுக்கல் பரிசுகள், சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிய அறிவிப்பு உள்ளிட்ட அங்கங்கள் இந்த நிகழ்ச்சியில் இடம்பெற்றன.

கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் குடும்பத்தினர் ஏறக்குறைய 150 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

சிங்கப்பூரில் கடந்த 16 ஆண்டுகளாக, கல்வி சார்ந்த சமூக நலப் பணிகளை ஆற்றி வரும் இச்சங்கம் இதுவரை 156 நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது.




இந்தக் குடும்ப தின நிகழ்ச்சியில் ஏறக்குறைய 150 பேர் கலந்துகொண்டனர்.
**படம்: ஜமால் முஹம்மது கல்லூரி**